# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 03.08.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 767/SCIC/2024**

திரு.B. சுகுமார் - புகார்தாரர்
எண்.28/106, அஷ்டபுரம் ரோடு
சூளை, சென்னை-600 007.
Phone:97910 17566.

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
முதுநிலை வரைவாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை - 600 008.

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **21.10.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 10.12.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 10.02.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 21/10/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், எழும்பூர், சென்னை-8 அவர்களுக்கு அனுப்பி, அதில் "கதவிலக்கம் 95 & 96 சூளை நெடுஞ்சாலை, சென்னை-7, M/s.Murdis Hotel கட்டியுள்ள 4 தளங்கள் கொண்ட கட்டிடம் - தொடர்பாக - தங்கள் அலுவலகத்தில் வரைபட பிளான் (Planning permit) அனுமதி பெற்று மேற்படி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா ? தகவல் வழங்கவும்" எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (03/08/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.B.சுகுமார் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில்

திருமதி/செல்வி.அ.ஜெயந்தா சொர்ண மணி, துணைத் திட்ட அமைப்பாளர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை அவர்கள் ஆஜரானார். மனுதாரர், தனது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 21/10/2024 நாளிட்ட மனுவின் வாயிலாக M/s.Murdis Hotel கட்டியுள்ள 4 தளங்கள் கொண்ட கட்டிடம் - தொடர்பாக - வரைபட பிளான் (Planning permit) அனுமதி பெற்று மேற்படி கட்டிடம் கட்டப்பட்டுள்ளதா ? தகவல் வழங்கவும் எனக் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர், 08/07/2025 தேதியிட்ட கடிதம் வாயிலாக பதில் அனுப்பியுள்ளதாகவும், அதில் தமது அலுவலக ஆவணங்களின்படி, அந்நிறுவனத்திற்கு எவ்வித திட்ட அனுமதியும் அளிக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். **எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ துணைத் திட்ட அமைப்பாளர், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை அவர்கள் மேற்குறிப்பிட்ட நிறுவனத்திற்கு கட்டிட அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறதா ? என்பதை அவரது அலுவலகத்தில் உள்ள பதிவேடுகளின் வாயிலாக மீண்டும் சரிபார்த்து, அதனை உறுதி செய்து, மனுதாரருக்கு சரியான பதிலினை விரைவு அஞ்சல் வாயிலாக 31/08/2026-க்குள் மனுதாரருக்கு அனுப்பி வைப்பதோடு, அதன் நகலினை ஆணையத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. பொது அதிகார அமைப்பினர் மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005 சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 21/10/2024 தேதியிட்ட மனுவிற்கும், சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான 10/12/2024 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவிற்கும் சட்டப்படி உரிய காலவரையறைக்குள் எவ்வித தகவலையும் வழங்கவில்லை எனத் தெரிய வருகிறது. மனுதாரருக்கு உரிய காலவரையறைக்குள் தகவல் வழங்காமைக்கு, ஆணையம் எச்சரிக்கிறது. இனி வருங்காலங்களில், தகவல் பெறும் உரிமைச் சட்டம்-2005-ன்படி, பொது அதிகார அமைப்பினர் மனுதாரருக்கு உரிய காலவரையறைக்குள் தகவல் வழங்கப்படவில்லையெனில், அச்சட்டத்தின் கீழான நடவடிக்கையினை எதிர்கொள்ள நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். CP 767/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
முதுநிலை வரைவாளர்
சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
தாளமுத்து நடராஜன் மாளிகை
எண்.1, காந்தி இர்வின் ரோடு
எழும்பூர், சென்னை - 600 008.

**புகார்தாரர்**

திரு.B. சுகுமார்
எண்.28/106, அஷ்டபுரம் ரோடு
சூளை, சென்னை-600 007.
Phone:97910 17566.

RG/Sr.PC